பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
07 11 2024 7 15
வியாழக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்-

- குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கோவாவில் கடற்படை சார்பில் நடைபெறும் நிகழ்ச்சியில் இன்று பங்கேற்கிறார்.
- புதுதில்லியில் தீவிரவாத எதிர்ப்பு மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா இன்று தொடங்கி வைக்கிறார்.
- தொழிலாளர் நலன் தொடர்பான திட்டங்களை தொழில்நுட்பத்தின் உதவியுடன் சிறப்பாகச் செயல்படுத்த அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.
- அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றிபெற்ற திரு டொனால்டு ட்டிரம்புக்கு உலகத் தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
- தேசிய சீனியர் ஆடவர் ஹாக்கி போட்டியின் நேற்றைய ஆட்டங்களில், கேரளா, ஒடிசா, புதுச்சேரி, ஹரியானா, ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா அணிகள் வெற்றி பெற்றன.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒரு நாள் பயணமாக இன்று கோவா செல்கிறார்.

கோவாவில் கடற்படை சார்பில் நடைபெறும் கடலில் ஒருநாள் என்ற நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

ஐ என் எஸ் -விக்ராந்த் விமானம் தாங்கி போர் கப்பலிலிருந்து மேற்கொள்ளப்படும் கடற்படை செயல்பாடுகளை அவர் பார்வையிடுகிறார்.

இதில் 150-க்கும் மேற்பட்ட கடற்படை வீரர்கள் பங்கேற்க உள்ளதாகவும், குடியரசு தலைவருக்கு சம்ப்ரதாய அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட உள்ளதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

வடமாநிலங்களில் கொண்டாடப்படும் சத்பூஜையையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நம்பிக்கை மற்றும் பக்தியின் நாளாக இந்நாள் திகழ்கிறது என்றும், இந்நாளில் மக்கள் நீர் நிலைகளில் புனித நீராடி சூரியனை வழிபடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளில் இயற்கை மற்றும் நதிகள் பாதுகாப்பு தொடர்பாக அனைவரும் உறுதியேற்க வேண்டுமென்றும் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

அமெரிக்க அதிபராக தேர்வு செய்யப்பட்டுள்ள திரு டொனால்டு ட்டிரம்புக்கு உலகத் தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு திரு ட்டிரம்புக்கு வாழ்த்து தெரிவித்தார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், திரு டொனால்ட் ட்ரம்புடன் இணைந்து மீண்டும் நெருக்கமாக பணியாற்றுவதை எதிர்நோக்கி இருப்பதாக கூறியுள்ளார்.

அமெரிக்காவின் உண்மையான நண்பராக பிரதமர் திரு நரேந்திர மோடி திகழ்வதாக திரு டொனால்டு ட்டிரம்ப், கூறியுள்ளார்.

தாம் வெற்றிபெற்ற பின் முதலில் தொலைபேசியில் தம்மை தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்த முதல் உலகத் தலைவர் திரு நரேந்திரமோடிதான் என்றும் திரு ட்டிரம்ப் கூறியுள்ளார்.

இங்கிலாந்து பிரதமர் திரு **Keir starmer** வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் வரும் ஆண்டுகளில் திரு ட்டிரம்ப்-வுடன் இணைந்து பணியாற்ற தாம் ஆவலுடன் இருப்பதாகவும், இங்கிலாந்தும், அமெரிக்காவும் நீண்டகாலமாக நல்லுறவை கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மாக்ரான் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த திரு டொனால்டு ட்டிரம்புடன் இணைந்து பணியாற்றப்போவதாகக் கூறியுள்ளார்.

ஜெர்மன் பிரதமர் திரு **Olaf scholz** நீண்ட காலமாகவே ஜெர்மனியும், அமெரிக்காவும் இணைந்து செயல்பட்டு வருவதாகவும், இது தொடரும் என்றும் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு, ஆஸ்திரேலிய பிரதமர் திரு ஆண்டனி ஆல்பனீஷ், உக்ரைன் அதிபர் திரு ஜெலன்ஸ்கி, இத்தாலி பிரதமர் திருமதி ஜார்ஜிய மெலோனி, ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி ஊர்சுலா ஒண்டர்லைன், நேட்டோ அமைப்பின் செயலாளர் திரு மார்க் ருட்டே உள்ளிட்டோரும் திரு டொனால்டு ட்டிரம்புக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

[]<<<>>>[]

புதுதில்லியில் இன்று தொடங்கும் தீவிரவாத எதிர்ப்பு மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தொடங்கி வைக்கிறார்.

தேசிய புலனாய்வு முகமை இந்த இரண்டு நாள் மாநாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

தீவிரவாத எதிர்ப்பு தொடர்பான உத்திகள், சட்டம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

தடயவியல் நடைமுறைகள் குறித்தும் இந்த மாநாட்டில் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த மாநாட்டில் தீவிரவாத தடுப்பு தொடர்பான மத்திய முகமைகள் மற்றும் மாநில அரசுகளின் காவல்துறை உயரதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

[]<<<>>>[]

தொழிலாளர் நலன் தொடர்பான திட்டங்களை தொழில்நுட்பத்தின் உதவியுடன் சிறப்பாகச் செயல்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

தொழிலாளர்களுக்கான ஸ்ரம் சுவீதா மற்றும் சமாதான் இணைய தளங்களை புதுப்பித்தல் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நேற்று புதுதில்லியில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பேசிய அமைச்சர், திறன் வாய்ந்த செயல்பாடு, எளிதில் பயன்படுத்தும் தன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்த தளங்கள் புதுப்பிக்கப்படும் என்று கூறினார்.

தொழிலாளர்களுக்கான சேவைகளை மேம்படுத்த மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறைதீர்ப்பு நடைமுறைகளும் தொழில்நுட்பத்தின் மூலம் திறம்பட மேற்கொள்ளப்படுவதாக திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

[]<<<>>>[]

பாரத் மொபிலிட்டி என்ற உலகளாவிய வாகன கண்காட்சி புதுதில்லியில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 18-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளதாக மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக புதுதில்லியில் நடைபெற்ற அறிமுக நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்தியாவின் வாகன தொழில்துறையின் திறனை இந்த கண்காட்சி எடுத்துரைக்கும் என்று கூறினார்.

மத்திய வர்த்தகத்துறை இணை அமைச்சர் திரு ஜிதின் பிரசாதா உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

**[]<<<>>>[]**

இந்திய பட்டு ஏற்றுமதி மேம்பாட்டு வாரியம் ஏற்பாடு செய்துள்ள 18-வது சர்வதேச கண்காட்சி இன்று புதுதில்லியில் தொடங்குகிறது.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த கண்காட்சியில் பட்டு தொழில்துறையைச் சேர்ந்த பல்வேறு நிறுவனங்கள் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.,

இந்நாளையொட்டி நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புற்றுநோயை தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கடந்த 2014-ஆம் ஆண்டு முதல் நவம்பர் ஏழாம் தேதி நாடு முழுவதும் இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

**[]<<<>>>[]**

பக்ரைன் அரசால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 28 பேரையும் விடுவிக்க மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக அவர்களின் தண்டனைக் காலம் குறைக்கப்பட்டுள்ளதாக பிஜேபி தமிழக ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் திரு எச் ராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு கடந்த மாதம் தாம் கடிதம் எழுதியிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதையடுத்து வெளியுறவு அமைச்சகம் நடவடிக்கை மேற்கொண்டதாகவும், அதன் காரணமாக மீனவர்களின் தண்டனைக்காலம் ஆறு மாதத்திலிருந்து மூன்று மாதமாக குறைக்கப்பட்டுள்ளதகாவும் அவர் கூறியுள்ளார்.

இதனால் மீனவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் திரு எச் ராஜா தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

மத்திய பிரதேச மாநிலத்தில் அரசு பணிகளில் மகளிருக்கு 35 சதவீத இடஒதுக்கீடு வழங்க அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

போபாலில் முதலமைச்சர் திரு மோகன் யாதவ் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

எஸ் சி, எஸ் டி, ஓ பி சி உள்ளிட்ட அனைத்து பிரிவுகளைச் சேர்ந்த மகளிருக்கு உள்ஒதுக்கீட்டின் அடிப்படையில் இது செயல்படுத்தப்படும் என்றும் அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

அருணாச்சல பிரதேசத்தில் மேலும் மூன்று மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு பெமா காண்டு கூறியுள்ளார்.

இட்டாநகரில் உள்ள மருத்துவக் கல்லூரியின் முதலாம் ஆண்டு மாணவர்கள் அறிமுக நிகழ்ச்சியில் பேசிய அவர், தற்போது மாநிலத்தில் ஒரே ஒரு அரசு மருத்துவக் கல்லூரி மட்டுமே உள்ளதாகக் கூறினார்.

வரும் ஆண்டுகளில் மாநிலத்தில் மேலும் மூன்று மருத்துவக் கல்லூரிகளைத் திறப்பதற்கான முதல் கட்ட பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின் உதவியுடன் 500 படுக்கைகள் கொண்ட பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும் என்றும் திரு பெமா காண்டு கூறினார்.

[]<<<>>>[]

அஸ்ஸாம் மாநிலத்துடன் மேகாலயா மற்றும் அருணாச்சல பிரதேச மாநிலங்களுக்கு உள்ள எல்லைப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும் என்று அம்மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான ஆய்வுக் கூட்டம் மத்திய உள்துறை செயலாளர் திரு கோவிந்த் மோகன் தலைமையில் குவாஹாத்தியில் நடைபெற்றது.

பிரச்சினைக்குரிய 49 கிராமங்களின் எல்லைகள் தொடர்பான ஆய்வுப் பணிகள் ஆறு மாத காலத்திற்குள் முடிக்கப்படும் என்று இந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் குறித்தும், அது தொடர்பான முன்னேற்றம் குறித்தும் மத்திய உள்துறை செயலாளர் திருப்தி தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஹரியானா மாநிலத்தில் வீட்டு மனை இல்லாத தகுதியான இரண்டு லட்சம் பேருக்கு முதலமைச்சரின் ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் தலா 900 சதுர அடி கொண்ட வீட்டு மனை மாநில அரசு சார்பில் வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு நயப் சிங் சைனி தெரிவித்துள்ளார்.

லட்வா தொகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்று பேசிய அவர், மாநிலம் முழுவதும் வளர்ச்சித் திட்டப் பணிகள் விரைவுபடுத்தப்படும் என்று தெரிவித்தார்.

மாநிலத்தில் தகுதியான பெண்களுக்கு மாதம் தோறும் இரண்டாயிரத்து நூறு ரூபாய் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதி விரைவில் நிறைவேற்றப்படும் என்றும் திரு நயப் சிங் சைனி உறுதியளித்தார்.

[]<<<>>>[]

தமிழ்நாடு, புதுச்சேரி, அந்தமான் நிகோபார் தீவுகள், கேரளா, கடலோர ஆந்திரா ஆகியவற்றின் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில் நாட்டின் மத்திய மற்றும் தென்பகுதிகளின் சில இடங்களில் அடுத்த ஒரு வாரத்திற்கு வெப்பநிலை இயல்பைவிட இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை அதிகரித்து காணப்படும் என்றும் அது கூறியுள்ளது.

[]<<<>>>[]

தேசிய சீனியர் ஆடவர் ஹாக்கி போட்டியின் நேற்றைய ஆட்டங்களில், கேரளா, ஒடிசா, புதுச்சேரி, ஹரியானா, ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா அணிகள் வெற்றி பெற்றன.

சென்னையில் நடைபெற்று வரும் இப்பேட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் தில்லி – உத்திரபிரதேசத்தையும், கர்நாடகா – திரிபுராவையும், உத்தராகண்ட் - சண்டிகரையும் எதிர்கொள்கின்றன.

தமிழ்நாடு – அந்தமானையும், தெலங்கானா – மிசோராமையும், ஆந்திரா – மத்திய பிரதேசத்தையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**